

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 313 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 09 – ஞாயிற்றுக்கிழமை 23 ஜுன் 2024 – திருச்சி★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 313 : Thiruvalluvar Year - 2055 - Aani 09 - Sunday 23 June 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## சமூக விரோதிகளிடமிருந்து

# மக்களைக் காப்பாற்ற அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் !

### சட்டப் பேரவையில் – கள்ளக்குறிச்சி உயிரிழப்புகள் தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதில் அளிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

சென்னை, ஜுன் 23 -

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், கள்ளக்குறிச்சி உயிரிழப்புகள் தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதில் அளித்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சமூக விரோதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற இந்த அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்” என உறுதியுடன் தெரிவித்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.6.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக இங்கு பேசிய உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, வேல்முருகன், கோ.க.மணி, ஈஸ்வரன், வீ.நாகைமாலி, நயினார் நாகேந்திரன், வைத்திலிங்கம், சதன் திருமலைக் குமார், சிந்தனைச் செல்வன், ராமச்சந்திரன், அப்துல் சமது ஆகியோர் இப்பொருள் குறித்து தங்கள் கருத்துகளைப் பதிவு செய்ததோடு அரசுக்கும் பல ஆக்கப்பூர்வமான கருத்துகளையும் தெரிவித்தனர். அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு நிச்சயமாக அதை கவனத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வெளிநடப்பு செய்யாமல், அவைக்குள் இருந்து தன் கருத்துக்களைப் பதிவு செய்திருக்கலாம். ஆனால், ஏனோ அதனைச் செய்யாமல் இதுபோன்ற ஒரு முக்கியமான பிரச்சினையிலும் அரசியல் காரணங்களுக்காகத் தன் கட்சியினருடன் வெளியே சென்றுவிட்டார். அவருக்கும் சேர்த்தே நான் பின்வரும் விவரங்களைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி!**

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், அதாவது கடந்த 19.6.2024 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், கருணாபுரத்தைச் சேர்ந்த 47 நபர்கள் மெத்தனால் கலந்த விஷச்சாராயம் அருந்திய காரணத்தினால் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டு உயிரிழந்த மிகவும் துயரமான சம்பவம் குறித்து உங்களைப் போலவே நானும் மிகுந்த வேதனையும், வருத்தமும் அடைந்தேன். அதுதொடர்பாக நேற்றைய தினம் இந்தப் பேரவையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தியிருக்கிறோம்.

இறந்து போன உயிர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உறவினர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவம் குறித்து பல்வேறு கருத்துகள் இந்த அவையில் தெரிவிக்கப்பட்டு வரக்கூடிய நிலையிலே, பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு ஒரு சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**அவசர மருத்துவ உதவிகள் செய்திட அறிவுறுத்தல்!**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருணாபுரம் சம்பவத்தைப் பொருத்தமட்டில், காவல்துறை மற்றும் வருவாய் துறையினர் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில், மெத்தனால் கலந்த சாராயத்தை அருந்தியதால் பலர் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் கிடைத்தது. உடனடியாக, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான அவசர மருத்துவ உதவிகளைச் செய்திட அறிவுறுத்தினேன்.

மருத்துவப் பணிகளை விரைவுபடுத்திட கூடுதலாக 57 அரசு மருத்துவர்கள், விழுப்புரம், சேலம், திருச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலிருந்து கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

போதுமான செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள 161 மருத்துவர்களோடு இவர்களும் அங்கு இணைந்து பணியாற்றி வருகிறார்கள்.

அரசு மருத்துவமனைகளில் இதுபோன்ற நிகழ்வுகளில் சிகிச்சைக்குப் பயன்படுத்தக் கூடிய உயிர்காக்கும் மருந்துகள் அனைத்தும் போதுமான அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில், பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைக் காத்திடும் பொருட்டு, அவை வெளிச்சந்தையில் வாங்கியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை !

**★ இதன் முதற்கட்டமாக, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் உடனடியாகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். ★ கள்ளக்குறிச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். ★ மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் ★ கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் ★ திருக்கோவிலூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் ★ திருக்கோவிலூர், உதவி காவல் ஆய்வாளர் ★ திருக்கோவிலூர் சட்டம்ஒழுங்குக் காவல் நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவல் நிலைய எழுத்தர், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், திருக்கோவிலூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோரும் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். ★ மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் தலைமை இயக்குநர் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் மாற்றப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

**இந்தச் சம்பவம் குறித்து தீர விசாரிக்கவும், அதனடிப்படையில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்த வழக்கினை உடனடியாக சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்க உத்தர விட்டேன்.**

இந்த மருத்துவப் பணிகளை ஒருங்கிணைத்திட தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் அவர்களும், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களும் முன்பே அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 164 நபர்களில் 117 நபர்கள் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். 47 நபர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருக்கிறார்கள்.

தற்போது 67 நபர்கள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 32 நபர்கள் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 2 நபர்கள் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 16 நபர்கள் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

**தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம்!**

இந்தச் சம்பவம் தொடர்பாக, கோவிந்தராஜ் என்கிற கண்ணுக்குட்டி என்பவர் காவல்துறையினரால் உடனடியாக கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரிடமிருந்து 200 லிட்டர் மெத்தனால் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய தாமோதரன், மதன், விஜயா (க/பெ. கோவிந்தராஜ்) ஆகிய 3 நபர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். புதுச்சேரியில் இருந்து மெத்தனால் கொண்டுவரப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# நீட் - நெட் தேர்வு மோசடிகளால் 33 லட்சம் மாணவர்கள் பாதிப்பு !

புதுடெல்லி, ஜுன் 23-

நீட் - நெட் தேர்வு மோசடிகளால் 33 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு, கருணை மதிப்பெண் உள்ளிட்ட பல்வேறு குளறுபடிகளால் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி நாடு முழுவதும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

நடப்பு ஆண்டு நீட் மற்றும் நெட் தேர்வுகளில் நடைபெற்ற மோசடி காரணமாக நாடு முழுவதும் 33 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

நடப்பு ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில் வினாத்தாள் கசிந்ததுடன், கருணை மதிப்பெண் உள்ளிட்ட பல்வேறு குளறுபடிகள் அரங்கேறின.

இதனால் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்று வருகிறது. நீட் தேர்வு குளறுபடி தொடர்பாக யு.பி.எஸ்.சி தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், நீட் தேர்வு குளறுபடிகள் காரணமாக தேர்வெழுதிய 24 லட்சம் மாணவர்களும், அவர்களது பெற்றோரும் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் தங்களுக்கு மருத்துவ இடங்கள் கிடைக்குமா? அல்லது மீண்டும் மறுதேர்வு எழுதும் நிலை வருமா? என்ற குழப்பத்தில் தவித்து வருகின்றனர்.

இதனிடையே, நீட் தேர்வு மோசடியை எதிர்த்து தொடரப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகள் மீது ஜுலை 8ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் விரிவான விசாரணை நடைபெற உள்ளது.

இதற்கிடையே தேசிய தேர்வு முகமை நடத்திய யுஜிசி நெட் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது. நெட் கேள்வித்தாள் டார்க் நெட் இணையதளம் மற்றும் டெலிகிராம் சமூக ஊடகத்தில் வெளியானதாக தேசிய சைபர் கிரைம் பிரிவு அளித்த தகவலின் பேரில், நெட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. மேலும், கசிந்த யுஜிசி நெட் கேள்வித்தாள் 500 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டதும் தெரியவந்துள்ளது. இதனால் நெட் தேர்வினை எழுதிய 11 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கள்ளக்குறிச்சி விஷச் சாராயம் தொடர்பாக

# ஓய்வுபெற்ற நீதிபதி கோகுல்தாஸ் விசாரணையை தொடங்கினார்!

கள்ளக்குறிச்சி, ஜுன் 23-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ள ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

கள்ளக்குறிச்சியில் நிகழ்ந்த சம்பவத்திற்கான அனைத்து காரணிகளையும் கண்டறிய, எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கவும் ஆணையத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கள்ளக்குறிச்சியில் ஓய்வுபெற்ற நீதிபதி கோகுல்தாஸ் நேற்று முன்தினம் விசாரணையை தொடங்கியுள்ளார். கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் பிரசாந்த், காவல் கண்காணிப்பாளர் ரஜித் சதுர்வேதி மற்றும் அரசு அலுவலர்களுடன் அவர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

**மேலும் 3 பேர் கைது!**

இந்நிலையில் கள்ளக்குறிச்சி விஷச் சாராய வழக்கில் கைதான 3 பேருக்கு, 15 நாட்கள் நீதிமன்றக் காவல் விதிக்கப்பட்ட நிலையில், மேலும் 3 முக்கிய குற்றவாளிகளை சி.பி.சி.ஐ.டி. காவல்துறை கைது செய்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் மெத்தனால் கலந்த விஷச் சாராயம் அருந்தியதால் 35க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். உடல்நலம் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வழக்கில் விசாரணையை முடுக்கிவிட்டுள்ள சிபிசிஐடி, சாராய வியாபாரி கோவிந்தராஜ், சகோதரர் தாமோதரன், கோவிந்தராஜ் மனைவி விஜயா ஆகிய 3 பேரை அதிரடியாக கைது செய்தது. அவர்கள் மூவரையும் 15 நாட்கள் காவலில் வைக்க கள்ளக்குறிச்சி நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இதனிடையே, விஷச்சாராயம் அருந்தியதால் 35க்கும் மேற்பட்டோர் உயிரிழப்புக்கு காரணமான முக்கிய குற்றவாளி சின்னதுரையை சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அவரிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில், மேலும் ஒரு முக்கிய குற்றவாளியான மாதேஷ் என்பவரை சென்னையில் கைது செய்துள்ளனர்.

மெத்தனாலை சின்னதுரையிடம், மாதேஷ் விற்றது தெரியவந்துள்ளது.

புதுச்சேரியில் இருந்து சாராயம் மற்றும் மூலப்பொருட்களை விற்ற சங்கராபுரத்தைச் சேர்ந்த ஜோசப் ராஜா என்பவரையும் அதிரடியாக கைது செய்துள்ளனர்.